**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா.: 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னசாமி |
| ஊர் | : | பனங்காட்டூர் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 48 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 26.09.2023.**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பனங்காட்டூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னபையன் எனது உடன் பிறந்த அண்ணன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணன் சின்னபையன் பண்ணந்தூர் அருகே சாலை விபத்தில் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்து. இது குறித்து புகார் அளிக்க எனது அண்ணன் குப்பன் என்பவர் அழைத்ததின் பேரில் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. எனது அண்ணன் பனங்காட்டூர் அருகே ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. முதலில் பண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்து அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனை சேர்த்து அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். விபத்தில் காயமடைந்த எனது அண்ணன் பேச முடியாதவர் ஊமை. நானும், எனது அண்ணனும் வந்து காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். சிறிது நாட்கள் கழித்து எனது அண்ணன் சிகிச்சை பலனின்றி சேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். **நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி எனது அண்ணன் மீது இரு சக்கர

வாகனத்தை விபத்து ஏற்படுத்திய நபர் தேவீரஅள்ளியை சேர்ந்தவர் என்று தெரிந்துகொண்டேன். அவர் பெயர் தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் நினைவில் இல்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இறந்துபோன நபர் வாய் பேச முடியாதவர் என்பதால் அவருக்கு சாலை விதிமுறைகள் தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா.: 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | இராணி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னபையன் |
| ஊர் | : | பனங்காட்டூர் |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 45 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 26.09.2023.**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பனங்காட்டூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னபையன் எனது கணவர். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது கணவர் வீட்டில் இருந்து அவருக்கு சொந்தமான TVS Excel இரு சக்கர வாகனத்தில் பண்ணந்தூரிலிருந்து வீட்டிற்கு வருவதற்காக பண்ணந்தூர் போஸ்ட் ஆபிஸ் வருவதற்காக தேவீரஅள்ளியை சேர்ந்த ஆஜர் எதிரி இந்தியன் என்பவர் இரு சக்கர வாகனத்தில் வந்து எனது கணவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் தகவல் சொல்லி சம்பவ இடம் சென்று பார்த்தேன். விபத்து நடந்தது காலை 09.00 மணி இருக்கும். நானும், எனது மகன் குப்புராஜும் சம்பவ இடம் வந்து பார்த்தோம். எனது கணவருக்கு தலையிலும், முகத்திலும், வலது பக்க அல்லையிலும், காயம் ஏற்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்தார். எனது கணவரால் சரிவர பேச இயலாது. எனது கணவர் சுய நினைவின்றி இருந்தார். உடனடியாக பண்ணந்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து தருமபுரி மருத்துவமனைக்கும் அங்கிருந்து சேலம் மருத்துவமனைக்கும் கொண்டு சென்றோம். அதே மாதத்தில் 7 ஆம் தேதி இரவு 02.00 மணியளவில் எனது கணவர் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி

இறந்துவிட்டார். இது குறித்து எனது மச்சினர் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 அளித்த புகாரை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து சேலம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். அதன் பிறகு 7 நாட்கள் கழித்து இறந்துவிட்டார். விபத்து நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வாய் பேச முடியாதவர் என்பதால் அவருக்கு சாலை விதிமுறைகள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா.: 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | குப்புராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னபையன் |
| ஊர் | : | பனங்காட்டூர்கொல்லை |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 25 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 26.09.2023.**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பனங்காட்டூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னபையன் எனது தகப்பனார். அ.சா.1 எனது சித்தப்பா. அ.சா.2 எனது அம்மா. கடந்த 01.04.2017 ம் தேதி காலை 09.00 மணியளவில் எனது அப்பா கொட்டாவூருக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக பண்ணந்தூர் போஸ்ட் ஆபிஸ் அருகே வந்த போது அவருக்கு சொந்தமான TVS Excel TN 233687 என்ற இரு சக்கர வாகனத்தில் வந்த போது பண்ணந்தூர் போஸ்ட் ஆபிஸ் அருகே வண்டியை நிறுத்தி சாலையின் ஓரமாக பால்கடை அருகே பெட்ரோல் வாங்கி கொண்டிருந்தபோது அவருக்கு எதிரே வந்த ஆஜர் எதிரி இந்தியன் யமகா FZ TN 24 AA 0092 என்ற இரு சக்கர வாகனத்தில் வந்து எனது அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். தகவல் தெரிந்து நானும், எனது அம்மாவும் வந்து பார்த்த போது அருகில் இருந்த பண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். எனது அப்பாவிற்கு இடது கண்ணிற்கு மேல் நெற்றியில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. வலது பக்க அல்லையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதிக அளவில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. சுயநினைவின்றி இருந்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தோம். அங்கிருந்து

ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அதன் பிறகு 07.04.2017 ம் தேதி இரவு எனது அப்பா சிகிச்சை பலனின்றிசேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். எனது அப்பாவால் சரிவர பேச இயலாது. திக்கி திக்கி பேசுவார். விபத்து குறித்து எனது சித்தப்பா அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து சம்மந்தமாக நஷ்ட ஈடு பெறுவதற்காக எனது சித்தப்பா கொடுத்த பொய் புகாரை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா.: 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | சின்னக்கண்ணு |
| ஊர் | : | பனங்காட்டூர்கொல்லை |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 52 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 26.09.2023.**

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது பனங்காட்டூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னபையன் எனது பெரியப்பா மகன். அ.சா.1ம் எனது பெரியப்பா மகன். அ.சா.2 சின்னப்பையனின் மனைவி. அ.சா.3 சின்னப்பையனின் மகன். கடந்த 01.04.2017ம் தேதி காலை 09.00 மணியளவில் எனது அண்ணன் சின்னபையன் பண்ணந்தூர் போஸ்ட் ஆபிஸ் அருகே TVS Excel இரு சக்கர வாகனத்தில் வந்த போது யமகா இரு சக்கர வாகனத்தில் வந்த தேவீரஅள்ளியை சேர்ந்த நபர் வேகமாக வந்து எனது அண்ணன் மீது மோதி பண்ணந்தூர் அரசு மருத்துவமனை போய் பார்த்தேன். எனது அண்ணனுக்கு தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. பண்ணந்தூரிலிருந்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தோம். 6 நாட்கள் கழித்து 7 வது நாள் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. வாய் பேச முடியாதவர் என்பதால் சாலை விதிமுறைகள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அவர் திக்கி

திக்கி பேசுவார். போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 59/2017**

**அ.சா.: 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆனந்தன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | வேடியப்பன் |
| ஊர் | : | பனங்காட்டூர்கொல்லை |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | கூலி |
| மதம் | : | |
| வயது | : | 28 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 26.09.2023.**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பனங்காட்டூர்கொல்லையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சின்னபையன் எனது சித்தப்பா. .சா.1ம் எனது சித்தப்பா. அ.சா.2 சித்தி. அ.சா.3 சின்னப்பையனின் மகன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எனது சித்தப்பா சின்னபையன் TVS இரு சக்கர வாகனத்தில் பண்ணந்தூர் நாலு ரோடு அருகே வந்த போது யமாக FZ வாகனத்தில் வந்த நபர் மோதி விபத்து ஏற்பட்டதாக போன் மூலம் தகவல் வந்தது. நான் பண்ணந்தூர் அரசு மருத்துவமனை சென்று எனது சித்தப்பாவை பார்த்தேன். அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர் சுயநினைவின்றி இருந்தார். அங்கிருந்து அவரை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக சொன்னார்கள். ஒரு வாரம் கழித்து எனது சித்தப்பா சேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. காவல் நிலையத்தில் போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால்
படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.